# நாமும் வளரணும் நம்மைச் சார்ந்தோரும் வளரணும்



## சிகரம் தொட்ட தமிழர்

## ஆர். நாராயணமோகன்



"ஒன்றே செய்யவேண்டும் அதை நன்றே செய்யவேண்டும் அதையும் இன்றே செய்யவேண்டும்," என்பது நம் சான்றோர் மொழி. இந்த முதுமொழியைக் கருத்தில் கொண்டு, "எதை செய்தாலும் வித்தியாசமாக மட்டுமின்றி விவேகமாகவும் செய்ய வேண்டும்" என்பது கணக்காயரும் வர்த்தக ஆலோசகருமான திரு ஆர். நாராயணமோகனின் தாரக மந்திரம்.

மோகன் என்று அழைக்கப்படும் அவர் தமிழகத்தில் சார்ட் டர்ட் அக்கவுன்டன்ஸி பயிற்சியுடன் அங்கீகாரம் பெற்ற கணக்காயராகத் தகுதி பெற்றார். 1976ம் ஆண்டில் சிங்கப்பூருக்கு வந்த அவர், நடராஜன் அண்ட் சுவாமிநாதன் எனும் கணக்கியல் நிறுவனத்தில் சேர்ந்தார். அந்தக் காலத்தில் கணக்கியல் துறையின் வர்த்தகம் அவ்வளவாக சூடு பிடிக்கவில்லை.

1990களில் இந்தியாவின் பொருளியல் மேம்படத் தொடங்கியபோதுதான், இந்தியர்கள் மற்ற நாடுகளுக்குச் சென்று வர்த்தகம் புரிய தொடங்கினர். அவர்களில் பலர் சிங்கப்பூருக்கு வந்தனர். தங்கள் வர்த்தகத்தின் கணக்குகளைச் சரிபார்க்க அதற்குரிய நிறுவனங்களை அணுகினர். அப்போது நடராஜன் அண்ட் சுவாமிநாதன் நிறுவனத்துக்கும் வாடிக்கையாளர்கள் குவிந்தனர் - என்றார் திரு மோகன்.

மாறி வரும் சூழ்நிலைக்கேற்ப கணக்கைத் தணிக்கை செய்யும் பணியைத் தவிர, மதிப்பு கூட்டும் இதர வர்த்தகம் தொடர்பான சேவைகளையும் தமது நிறுவனம் அறிமுகம் செய்தது. அவை வாடிக்கையாளர்களிடமிருந்து நல்ல ஆதரவை அதற்கு ஈட்டித் தந்தது. சிங்கப்பூரில் தற்போது சுமார் 3,500 இந்திய நிறுவனங்கள் செயல்படுகின்றன. அவற்றுள் சுமார் 1,000 நிறுவனங்களுக்கு தமது நிறுவனம் சேவையாற்றி வருகிறது என்றும் கூறினார் திரு மோகன்.

இத்துறையில் கடந்த 32 ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் திரு மோகன், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், கணக்காயர்கள் என்று அனைவருமே தொழில்முனைவர்கள்தான் என்று கூறுகிறார். அவர்களைத் தேடி வருவோருக்குப் பலன் அளிக்கும் மேம்பட்ட சேவைகளை அவர்கள் தொடர்ந்து வழங்கவேண்டும். அப்போதுதான் அவர்களின் தொழில் சிறந்தோங்கி வளரும் என்றார்.

மேலும், சேவைத் துறையில் இருக்கும் ஒவ்வொருவரும் முடிந்தவரை தங்கள் நண்பர் வட்டத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். அவர்களின் தொடர்பு எங்கள் பயன்பாட்டில் உள்ளனவா என்பதையும் சரி பார்த்துக் கொள்ளவேண்டும் என்று குறிப்பிடும் திரு மோகன், ஒரு நாளைக்கு நான்கு நிகழ்ச்சிகளுக்குச் செல்லவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருந்தால்கூட அவை ஒவ்வொன்றுக்கும் சென்று வருவதாகவும் கூறுகிறார்.

உங்களைப் பற்றி மற்றவர்கள் தங்கள் நினைவில் வைத்துக் கொள்ளவும் இந்த முறை உதவும் என்று சுட்டிய திரு மோகன், ஓர் உதாரணத்தையும் கூறினார்.

"உலகின் புகழ்பெற்ற மெர்சடிஸ் பென்ஸ் காரில் உலகத் தலைவர்கள் பலரும் பவனி வருகின்றனர். அப்படிப்பட்ட புகழ்பெற்ற காருக்கும் இன்றும் விளம்பரம் செய்து கொண்டு இருக்கிறார்கள். அப்படித்தான் நம் நிலையும். நாம் அடிக்கடி சமூக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதால், நம்மை மற்றவர்கள் மறக்கமாட்டார்கள். நமது வியாபாரம் பெருகுவதற்கும் இது வழி வகுக்கும்," என்றார்.

சிங்கப்பூர் இந்திய வர்த்தக தொழில் சபையில் 2002ல் ஆண்டில் தம்மை இணைத்து கொண்ட திரு மோகன், தொடர்ந்து ஆறு ஆண்டுகளுக்குச் சபையின் பொருளாளராக சேவையாற்றினார். இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 27ம் தேதியன்று அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு சிங்கப்பூர் இந்திய வர்த்தக தொழில் சபையின் தலைவராகப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட திரு மோகன், சிங்கப் பூர் வர்த்தகச் சம்மேளனத்தின் இரு துணைத் தலைவர்களில் ஒருவராகவும் இடம்பெற்றுள்ளார்.

நமது இந்திய இளையர்களில் அதிகமானோர் தொழில் முனைவர்களாக வேண்டும் என்பது திரு மோகனின் ஆசை. அதற்கு சிங்கப்பூர் இந்திய வர்த்தக தொழில் சபை ஆவன செய்ய காத்திருக்கிறது என்றும் சொன்னார். ஒருவர் தொழில்முனைவராவதற்குத் தேவையான தகுதிகளையும் திரு மோகன் பட்டியலிட்டார். 1) தமது தொழிலில் மிகுந்த பற்று வேண்டும். 2) கணக்கு பற்றிய நல்ல அறிவு வேண்டும். 3) நிறுவனத்தின் கணக்கை அடிக்கடி சரி பார்க்கவேண்டும் என்பதே அந்த அடிப்படை தகுதிகள்.





## வளர்ச்சி அடைய வேண்டும். அது நேர்மையான வளர்ச்சியாக இருக்க வேண்டும்.

திரு மோகன் 1981ம் ஆண்டில் திருமதி ராதிகா என்ற ராஜலட்சுமியைக் கரம் பற்றினார். அவர்களுக்கு இரு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். மூத்தவரான 25 வயது ஸ்ரீகாந்த் அமெரிக்காவில் கணினித் துறையில் பயின்று, இப்போது லண்டன் பொருளியல் கல்லூரியில் பயின்று வருகிறார். இளையவரான 20 வயது ஸ்ரீராம், தற்போது தேசிய சேவையை முடித்திருக்கும் வேளையில் விரைவில் தந்தை பணியாற்றும் நிறுவனத்தில் சேர இருக்கிறார். பின்னர் கணக்கியல் துறையில் பட்டம் பெறுவது ஸ்ரீராமின் இலக்கு.

1978ம் ஆண்டில் திரு மோகனும், அவர் சகோதரர் திரு கண்ணனும் நடராஜன் அண்ட் சுவாமிநாதன் நிறுவனத்தின் பங்குதாரர்களாயினர். பின்னர் 1990ம் ஆண்டில் திரு கண்ணன் அமெரிக்காவில் குடியேறியதால், நிறுவனத்தின் முழு உரிமையாளரானார் திரு மோகன். இப்போது திரு நாராயணமோகனின் நடராஜன் அண்ட் சுவாமிநாதன் நிறுவனத்தில் 60க்கு மேற்பட்ட ஊழியர்கள் வேலை செய்து வருகிறார்கள்.

திரு மோகன் பல சமூக நடவடிக்கைகளிலும் சுறுசுறுப்புடன் ஈடுபட்டு வருகிறார். கோயில் நிர்வாகங்கள், ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் சேவை, சிண்டா நடவடிக்கைகள், வருடாந்திர சிங்கப்பூர் தமிழ் மொழி மாதத்தின் நடவடிக்கைகள் போன்று இன்னும் பற்பல வகைகளில் தமது பங்கைச் சமூகத்துக்கு அளித்து வருகிறார் இவர்.

திரு மோகன் பற்றி மற்றொரு சுவாரஸ்யமான விஷயம்: லிட்டில் இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக நிறுவனம் என்று பெயர் பெற்றுள்ள முஸ்தபா சென்டரின் கணக்குகளைக் கடந்த 32 ஆண்டுகளாகச் சரி பார்த்துக் கொண்டிருப்பது திரு மோகனின் நடராஜன் அண்ட் சுவாமிநாதன் நிறுவனம்தான்.

"வளர்ச்சி அடையவேண்டும். அது நேர்மையான வளர்ச்சியாக இருக்கவேண்டும். எப்போதும் தன்னடக்கம் முக்கியம்," என்று கூறும் திரு நாராயணமோகன், தாமும் வளரவேண்டும் தம்மைச் சார்ந்தவர்களும் வளரவேண்டும் எனும் கொள்கையுடன் பீடு நடை போட்டுக் கொண்டிருக்கிறார். ■